S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE புதன் ஜனவரி 07 * 2026 * மலர் -1 * இதழ்-220* VOL-1 * ISSUE-220 விலை ரூ.3 * பக்கம் -4



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகம் செல்லும் வழியில் காமராசர் சாலையில் உள்ள இராணி மேரிக் கல்லூரி வளாகத்தில் மாணவியர்கள் சந்தித்து, "உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, மடிக்கணினிகள் வழங்கியதற்காக முதலமைச்சA க்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம்!

சென்னை, ஜன.07–

தமிழக சட்டசபைக் கூட்டம் இம்மாதம் 20–ஆம் தேதி தொடங்குகிறது. இந்நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆளுநர் உரையில் இடம்பெற வேண்டியவை குறித்தும், இடைக்கால பட்ஜெட் தயாரிப்பு குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது. சட்டசபைத் தேர்தல் நடைபெற இன்னும் சில மாதங்களே உள்ளதால் இன்றைய அமைச்சரவைக் கூட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதப்படுகிறது.

தமிழக சட்டசபையின் கூட்டம் கடைசியாக அக்டோபர் 14–ஆம் தேதி தொடங்கி 17–ஆம் தேதி வரை 4 நாள்கள் மட்டுமே நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த கூட்டத்தில் 16 மசோதாக்கள் நிறைவே ற்றப்பட்டன. அதன் பிறகு தேதி குறிப்பிடப்படாமல் சபை ஒத்திவைக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி நாடாளுமன்றம் அல்லது சட்டசபைகளின் ஒரு கூட்டத்துக்கும் மறு கூட்டத்துக்கும் இடையே 6 மாதத்துக்கு மேல் இடைவெளி இருக்கக் கூடாது. இதன் அடிப்படையில் தான் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் சபாநாயகர் அப்பாவு கூறியதாவது:–

2026–ஆம் ஆண்டுக்கான சட்டசபையின் முதலாவது கூட்டம் ஜனவரி 20–ஆம் தேதி செவ்வாய்க்கிழமை கூடுகிறது. அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு சபை கூடும். ஆண்டின் முதலாவது கூட்டம் என்பதால் ஆளுநர் உரை நிகழ்த்துவார். பேரவையின் மரபு மாற்றப்படாது. தமிழ்நாடு அரசு தயாரித்து வழங்கும் உரையை ஆளுநர் முழுமையாக வாசிப்பார் என நம்புகிறேன். அவர் பேரவையின் மாண்பைக் காப்பாற்றுவார் எனக் கருதுகிறேன்.

அதனைத் தொடர்ந்து கூட்டத் தொடரை எத்தனை நாள்கள் நடத்துவது என்பது குறித்து அலுவல் ஆய்வுக் குழு கூடி முடிவு செய்யும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்தக் கூட்டம் குறைந்த நாட்களே நடைபெறும். ஜனவரி 21–ஆம் தேதி ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடங்கும். ஓரிரு நாட்கள் விவாதம் நடைபெறும். இறுதியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலளித்துப் பேசுவார். இந்தக் கூட்டம் ஜனவரி 24–ஆம் தேதி வரை நடைபெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு பிப்ரவரி மாதம் பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கும். இன்னும் சில மாதங்களில் சட்டசபை தேர்தல் நடக்க இருப்பதால் முழு அளவிலான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட மாட்டாது. அதற்குப் பதிலாக இடைக்கால பட்ஜெட் மட்டுமே தாக்கல் செய்யப்படும். தேர்தலுக்குப் பிறகு பதவி ஏற்கும் புதிய அரசுதான் முழு பட்ஜெட்டை சமர்ப்பிக்கும். தேசிய அளவிலும், மாநில அளவிலும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் அடுக்கடுக்காக நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்காளம், அசாம் ஆகிய 4 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசமான புதுச்சேரி ஆகியவற்றில் சட்டசபை தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் தீவிரம் அடைந்துள்ளன. சட்டசபை தேர்தல் அட்டவணை இன்னும் சுமார் 10 வாரங்களில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பின்னணியில் தமிழ்நாடு சட்டசபையின் இந்த ஆண்டுக்கான முதல் கூட்டத் தொடர் வருகிற 20–ஆம் தேதி தொடங்குகிறது. முதல் நாள் கூட்டத்தில் கவர்னர் ஆர்.என்.ரவி உரை நிகழ்த்துவார். கடந்த காலத்தில் ஏற்பட்டதைப் போன்ற நெருடலான நிகழ்வு இந்த ஆண்டும் ஏற்படுமா? என்ற கேள்வி அரசியல் களத்தை உலுக்கி வருகிறது.

சட்டசபை கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்பு, முதல்அமைச்சர் தலைமையில் அமைச்சரவை கூடி விவாதிப்பது வழக்கம். அந்த வகையில் இன்று காலை 11 மணிக்கு தலைமைச் செயலகத்தில் அமைச்சரவை கூட்டம் தொடங்கியது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இந்த ஆண்டு முதல்முறையாக கூடியுள்ள அமைச்சரவை கூட்டத்தில் அனைத்து அமைச்சர்களும் பங்கேற்றுள்ளனர்.

# 2 குழந்தைகளை கிணற்றில் தள்ளி கொலை செய்து தாய் தற்கொலை!

## வருசநாடு அருகே பரிதாப சம்பவம்!!

வருசநாடு , ஜன.7–

தேனி மாவட்டம், வருசநாடு அருகே தண்டியகுளம் கிராமத்தைச் சேந்தவர் ஜெயபெருமாள். இவர் தினமும் மது குடித்து விட்டு மனைவி தனலட்சுமியிடம் தகராறு செய்து வந்தார். இந்நிலையில் நேற்று மீண்டும் குடித்து விட்டு மனைவியிடம் தகராறு செய்தார். இதனால் மன வேதடைந்த தனலட்சுமி (38), தனது இரு மகன்களான தேவா (7), நீதி (2) ஆகியோரை நள்ளிரவு 12 மணியளவில் அங்குள்ள தனியார் தோட்டத்திற் அழைத்துச்சென்றார். பிறகு 2 குழந்தைகளையும்



தனலட்சுமி கிணற்றுக்குள் தள்ளி விட்டு தானும் குதித்தார். சிறிது நேரத்தில் 3 பேரும் தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக இறந்தனர். இது பற்றி வருசநாடு போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

போலீசார் அங்கு சென்று 3 பேரின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தேனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.



# பொது அறிவிப்பு

திருநெல்வேலி மாவட்டம், வடக்குவள்ளியூர் பெருமாள் கோவில் தெரு. கதவு எண் **122/58ல்** வசித்து வரும் லேட் நம்பி அவர்கள் புதல்வர் முருகேஷ் தகவல் பேரில் பொது மக்களுக்கு தெரியப்படுத்தும் அறிவிப்பு என்னவென்றால்,

இதன் தபசில் சொத்து எமது கட்சியின் தகப்பனார் நம்பி கோனாருக்கு 1993-ம் வருசத்தில கிரைய மூலம் பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்த **03.06.2013ல்** அவரது மனைவியும் எனது கட்சியின் தாயார் பெயருக்கு செட்டில் மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்பட்டு தபசிலின்சொத்தில்தெற்கடையசெண்டு3(மூன்று)3வதுநபருக்குகிரையம்கொடுக்கப்பட்டு, மீதமுள்ள நிலம் எமது கட்சியின் பெயரில் இருந்து வரும் நிலையில் எமது கட்சியின் தாயார் தபசிலில் அமைந்துள்ள பழைய வீட்டினை இடித்துவிட்டு புதிய வீடு கட்டவேண்டும் என தனது ஒரே புதல்வரான எமது கட்சியிடம் கேட்ட பொழுது எமது கட்சியினத்தவர்கள் சகோதரிகளிடம் ஆலோசித்து தனது தாயாரிடம் எனது பெயருக்கு ஆவணங்கள் இருந்தால் தான் வீடு கட்ட இயலும் எமது கட்சி பொது சொத்தில் செலவு செய்து வீடு கட்டினால் எமது கட்சி செலவழித்த தொகைக்கு யாதொரு வழிகள் இல்லாமல் போய்விடும் என எமது கட்சி கூறியதின் பேரில் எமது கட்சியின் தாயார் 2020ல் பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் எமது கட்சியும் தனது தாயார் மீது உள்ள பாசத்தின் அடிப்படையில் வங்கியில் கடன் பெற்றும் தங்கள் கைவசம் இருந்த தொகையில் வீடு கட்டப்பட்டது. பின்னர யாதொரு பிரச்சனையும் குடும்பத்தில் ஏற்படாமல் இருந்து வந்த நிலையில் எமது கட்சி வேலை நிமித்தமாக வெளியே சென்ற பொழுது எமது கட்சியின் தாயாரின் சில புரோக்கர்கள் சந்தித்து தபசில் சொத்தினை பொறுத்து ஏற்படுத்திய கிரைய ஆவணங்கள் மறைத்து 3ஆம் தரப்பினருக்கு விற்பனை செய்ய முயற்ச்சி செய்து வருகிறார்கள் எமது கட்சியும் இதன் தபசில் சொத்து சமபந்தமாக நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்து வருக்கிறார். ஆதலால் இதன் தபசில் சொத்தினை எமது கட்சியின் தாயாரிடம் கிரையம் பத்திரம் ஏற்படுத்த வேண்டாம் என இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

## தபசில் சொத்து விபரம்

திருநெல்வேலி பதிவு மாவட்டம், வள்ளியூர் சார்பதிவாளர் சரகம், இராதாபுரம் வட்டம், வடக்கு வள்ளியூர் கிராமம் & சிறப்பு நிலை பேரூராட்சி மன்றம் முன்பு 18வது வார்டு தற்போது 9வது வார்டு மேலகிராமம் என்ற பெருமாள் கோவில் தெருவில் நத்தம் சர்வே 12628/1A நம்பரானது நத்தம் நிலவரித்திட்டத்தின்படி புதிய சர்வே 2194/24 நம்பர் ஹெக்டர் 0.03.40க்கு அளவு கிழமேல் வடபக்கம் 3.2 மீட்டர் கிழமேல் தென்பக்கம் 5 மீட்டர் தென்வடல் இருபக்கமும் 83 மீட்டர் அளவுள்ளதற்கு சதுரமீட்டர் 340.3 (செண்டு 8.40) அளவுள்ள மனையில் தெற்கடைய செண்டு 3 போக மீதமுள்ள செண்டு 5.40ல் அதிலுள்ள வடக்குப் பார்த்த பழைய கதவு எண்.58 புதிய கதவு எண் 122 நம்பருள்ள விடும். மேற்படி வீட்டிலுள்ள மின் இணைப்பு எண்.0640070355(F .355) ஆகும். மேற்படி வீட்டிலுள்ள குடிதண்ணீர் இணைப்பு எண்.440 ஆகும்.

**மாதவன் பிள்ளை கம்பவுண்ட்**
**வள்ளியூர் - 627117.**
**திருநெல்வேலி மாவட்டம்**

**R. பாண்டிய ராஜா BABL**
**K. ஸ்ரீராம் BALLB**
**K பொன் ராஜ் BCOM BL**
**அட்வகேட்ஸ்**




சென்னை தீவுத்திடலில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அரசு விரைவு போக்குவரத்து இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட 61 அதிநவீன பேருந்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு,சிவசங்கர்,மேயர் பிரியா ஆகியோர் உள்ளனர்.

## திருப்பத்தூர் மாவட்டத்தில்

# கல்லூரி மாணவர்களுக்கு முதற்கட்டமாக 2112 லேப்டாப்!

## ஆட்சியர் மற்றும் எம்.எல்.ஏக்கள். வழங்கினர்!!

திருப்பத்தூர். ஜன.7

தமிழ்நாடு அரசு சார்பில் உலகம் உங்கள் கையில் என்ற தலைப்பில் 10 லட்சம் மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி திட்டத்தை முதலமைச்சர் ஸ்டாலின் துவக்கி வைத்த நிலையில் திருப்பத்தூர் மாவட்டம், கரியம்பட்டி பகுதியில் உள்ள திருவள்ளுவர் அரசு கலை கல்லூரி வளாகத்தில் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது. இதில் ஜோலார் பேட்டை சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினர் தேவராஜ், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி திமுக உறுப்பினர் நல்லதம்பி ஜோலார் பேட்டை ஒன்றிய குழு தலைவர் சத்யா சதீஷ். கந்திலி ஒன்றிய குழு தலைவர்



திருமுருகன். திருப்பத்தூர் ஒன்றிய சேர்மன் விஜயா அருணாச்சலம்.. ஒன்றிய செயலாளர்கள் கந்திலி. மோகன்ராஜ். குணசேகரன். முருகேசன். அசோக் குமார். ஆகியோர் கலந்து கொண்டு 403 கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினியை வழங்கினர். பின்னர் கலைக் கல்லூரி மாணவர்களின் நலன் கருதி கல்லூரி வளாகத்தில் மகளிர் குழு சார்பில் சிறு தானிய உணவகத்தை மாவட்ட ஆட்சியர் மற்றும் எம்எல்ஏக்கள் தொடங்கி வைத்து மாணவர்களுக்கு வழங்கக்கூடிய சிறுதானிய உணவுகள் குறித்து ஆய்வு நடத்தி இன்று போல் என்றும் சுவை மாறக்கூடாது என்று ஆட்சியர் கேட்டுக் கொண்டார். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்:

# தாராபுரத்தில் மாநில அளவிலான கைப்பந்து போட்டி!

### அமைச்சர் கயல்விழி தொடங்கி வைத்தார்!!

தாராபுரம்த, ஜன.7

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றியம், அலங்கியத்தில் நடைபெற்ற மாநில அளவிலான கைப்பந்து போட்டியில் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கினார் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்கள். உடன் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர்

இல. பத்மநாதன், தாராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செந்தில்குமார், தாராபுரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சன் பாலு, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# ஈரோட்டில் இளைஞர் நீதி குழும அலுவலக கட்டிடம்!

### மாவட்ட நீதிபதி, கலெக்டர் திறந்து வைத்தனர்!!

ஈரோடு, ஜன.7

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட முதன்மை நீதிபதி எஸ். சமீனா, மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருச.கந்தசாமி ஆகியோர் இளைஞர் நீதிக் குழும அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்தார்கள்.

இளைஞர் நீதிச்சட்டம் 2015 மற்றும் அதன் விதிகள் செயல்படுத்துவதன் மூலம் 18 வயதிற்குட்பட்ட சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளை விசாரித்து, பாதுகாப்பு அளித்து. சீர்திருத்தி, மறுவாழ்வு அளிப்பதே இக்குழுமமத்தின் நோக்கமாகும். குழந்தைகளின் நலனை முன்நிறுத்தி சட்ட உதவி, ஆலோசனை, சமூக ஒருங்கிணைப்பு போன்றவற்றை உறுதி செய்து இளைஞர் நீதிக் குழுமம் செயல்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்ட இளைஞர் நீதிக் குழும அலுவலகம் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வந்த நிலையில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இளைஞர் நீதிக் குழுமம் செயல்பட ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடத்தை இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.அ.சுஜாதா, தலைமை நீதித்துறை நடுவர் திருமதி. கே.கிருஷ்ண பிரியா. இளைஞர் நீதிக்குழும முதன்மை நடுவர் ஆர்.வாஞ்சிநாதன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்ரா.உமாமகேஸ்வரி.மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், நீதிமன்ற நடுவர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# ஆலங்குடியில் 37-வது தேசிய சாலை பாதுகாப்பு உறுதிமொழி விழிப்புணர்வு!

புதுக்கோட்டைஜன.7

புதுக்கோட்டை மண்டலம் ஆலங்குடி அரசு போக்குவர த்து கழகம் 37 வது தேசிய சாலை பாதுகாப்பு உறுதி மொழி விழிப்புணர்விற்கு பள்ளியின் தலைமை ஆசி ரியர் தியாகராஜன் தலைமை தாங்கினார். ஆலங்குடி டெப்போ கிளை மேலாளர் முத்துராமன் புதுக்கோட்டை மண்டல அலுவலர் மற்றும் உதவி பொறியாளர் சண்முகசுந் தரம் ஓட்டுநர் (பயிற்சி ஆசிரியர்கள் )இளங்கோவன் க ணேசன் ஆகி யோர் முன்னிலையில் நடைபெற்றது.

தலைக்கவசம் உயிர் கவசம், உயிரிழப்பை தவித்திடு. சாலையில் செல்லும் போது அலைபேசி பேசாதே,மது அருந்து வாகனம் ஓட்டக்கூடாது. போதையில் பயணம் பாதையில் மரணம் என்பார்கள்.

மிதவேகம்.சாலையில் முந்தாதே,சீட் பெல்ட் அணியாமல் வாகனம் ஓட்டாதே. மோட்டார் சைக்கிள் வாகனம் இருவர் செல்ல மட்டுமே. ஓடும் பேருந்தில் அவசரக்க தியில் ஏறாதே.

உயிரை பணயம் வைக்காமதே விபத்தை தடுப்போம். ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு வாகனங்களுக்கு வழி விடு.

மருத்துவமனை பள்ளி மற்றும் கல்லூரி அருகில் ஒலி எழுப்பக்கூடாது.மஞ்சள் கோ ட்டை தாண்டாக்கூடா து.என 34 வகையான விபத்தில்லா தமிழகத் தை உருவா க்கிடுவோம் என மாணவர்களிடையே எடுத்துரைத்தார் கள்

சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் குறித்து சாலை பாதுகாப்பு மேம்படுத்திட வி பத்தில்லா தமிழகத் ததை உருவாக்கிட உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

# கொடைக்கானலில் வீடு இல்லை வாசல் இல்லை பொதுமக்கள் கண்ணீர்!

### அரசு கருணை கூர்ந்து பட்டா வழங்கி துயர் நீக்க கோரிக்கை!!



கொடைக்கானல், ஜன.7

கொடைக்கானல் நாயுடுபுரம் பகுதிக் குட்பட்ட குருசாமி பள்ளம் பகுதியில் வீடு இல்லாத பொதுமக்கள் தங்களுக்கு தமிழக அரசு வீட்டு பட்டா வழங்கி தங்களது குடும்பங்களின் துயர் நீக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

குருசாமி பள்ளம் என்ற பகுதியில் 40 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தங்களது குடும்பங்களுடன் வசித்து வருகின்றனர். இதில் கூலி தொழில் செய்து வரும் பெண்கள் தங்கள் பெண் குழந்தைகளுடன் வாழ்வாதாரம் இன்றி வசித்து வருகின்றனர்.

இவர்களது வாழ்வாதாரம் கேள்விகுறியான சூழ்நிலையிலே உள்ளது.

இந்நிலையில் குருசாமி பள்ளம் பகுதியில் அரசு தரிசு

நிலத்தில் பிளாஸ்டிக் தார்பாய்களை கொண்டு வீடுகளை அமைத்து சமையல் செய்தனர்.

பொதுமக்கள் கூறியதாவது: வீட்டு வாடகை கொடுக்க முடியாமல் எங்கள் வாழ்க்கை கேள்வி குறியாகியுள்ளது. எங்களுக்கு தமிழக அரசு கருணை கூர்ந்து பட்டா வழங்க நடவடிக்கை எடுத்து எங்கள் கண்ணீரை துடைக்க வேண்டும் என்றனர்.

மேலும் 40 குடும்ப உறுப்பினர்களின் கையொப்பம் இட்ட மனுவினை கோட்டாட்சியரிடம் வழங்க உள்ளதாகவும் தெரிவித்தனர்.

ராசத்தி என்ற பெண் கூறியதாவது:

எனக்கு மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர். வீட்டின் வாடகை தர முடியாத சூழலில் உள்ளேன். இதில் ஒரு பெண் குழந்தை மாற்றுத்திறனாளியாக உள்ளார். எங்கள் துயரை நீக்கி எங்களுக்கு வீட்டு பட்டா வழங்க வேண்டும் என்றார்.

## கோவை மாநகர் மாவட்ட

# ம.தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

கோவை,ஜன.7

கோவை மாநகர் மாவட்ட மதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கோவையில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது, மாவட்ட அவைத் தலைவர் சேதுபதி தலைமை தாங்கினார்.

மாவட்ட செயலாளர்செல்வராஜ் முன்னிலை வகித்தார், இதில் மாநிலஅவைத் தலைவர் ஆடிட்டர் அர்ஜூன்ராஜ். உயர்நிலைக்குழு உறுப்பினர் கோவை ஆர்,ஆர், மோகன்குமார் ஆகியோர் பேசினார்கள்.கூட்டத்தில் கோவைமாநகர் மாவட்ட மதிமுக மகளிர்அணி சார்பில்வரும் 11 ந் தேதிபொங்கல் விழாவை சமத்துவ பொங்கலாககொண்டாடுவது,

கடந்த2ந் தேதிபோதைஒழிப்புமற்றும்சமத்துவத்தைவலியுறுத்திநடைபயணம்மேற்கொண்டுள்ளபொதுச் செயலாளர் வைகோவுக்குகோவை ஒருங்கிணைந்த மாவட்ட் சார்பில்துரை நாகமங்கலத்தில்வரவேற்பு கொடுப்பதுஎன்பதுஉள்ளிட்டதீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன. இதில்மாநகர்மாவட்ட துணை செயலாளர்கள் பயனீர் தியாகு தூயமணி, பகுதி செயலாளர்கள்எஸ்.பி வெள்ளியங்கிரி, அன்புஎன்ற தர்மராஜ்.எல் லூயிஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர்ரெ.சதீஸ், பெற்றுக்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்)சந்திரசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெ.ரூபன் சங்கர் ராஜ், மகளிர் திட்ட இயக்குநர் அ.லலிதா, மாவட்ட வன அலுவலர் கா.இராஜாங்கம், , வருவாய் கோட்டாட்சியர்கள் தருமபுரி மற்றும் அரூர், தனித்துணை ஆட்சியர் (சபாதி)சுப்பிரமணியன் உள்ளிட்ட தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



## கொல்லகுப்பம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில்

# அரசாணையையும் மீறி காலனி என்னும் எழுத்துகள் நீக்கப்படாமல் உள்ளதால் நடவடிக்கை எடுக்கப்படுமா?

வாணியம்பாடி ஜன.7

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட,

திருப்பத்தூர் மாவட்டம், கொல்லகுப்பம், கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, முகப்பில், பல மாதங்களுக்கு, முன் கொல்லகுப்பம் காலனி என்று எழுதப்பட்டிருந்த நிலையில், இது வரையில் காலனி என்ற சொல் அழிக்கப் படாமல் இருக்கிறது. இந்த வார்த்தையை தமிழகத் தில் எங்கும் பயன் படுத்தக்கூடாது என அரசாணை வெளியிட்டும், பள்ளி நிர்வாகம் இதனை நீக்காமல் அலட்சியம் காட்டி வருகிறது. இனிமேலாவது, காலனி என்ற எழுத்துகள், பள்ளியின் முகப்பில் உள்ளதை அகற்ற வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?...




# ஸ்டார் ஹெல்த் நிறுவனத்திற்கு எதிராக உரிமம் இன்றி ஒலி பதிவுகளை ஒலிபரப்ப தடை உத்தரவு பெற்றது பிபிஎல் இந்தியா!

சென்னை, ஜன.7

ஸ்டார் ஹெல்த் & அலாய்டு இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் டுக்கு எதிராக, உரிமம் இன்றி ஒலி பதிவுகளை பொதுமக்களுக்கு ஒலி பரப்புவதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவை மும்பை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளதாக *Phonographic Performance Limited* (PPL இந்தியா) தெரிவித்துள்ளது. PPL இந்தியாவிற்கு உரிமைப்பட்ட ஒலிப்பதிவுகள் சட்டபூர்வ அனுமதி இன்றி பயன்படுத்தப்பட்டதாக நீதிமன்றம் *prima facie* ஏற்றுக்கொண்டது. டிசம்பர் 2025ல் வழங்கப்பட்ட உத்தரவின் மூலம், ஸ்டார் ஹெல்த் நிறுவனம் கடந்த நிகழ்வுகளுக்காக PPL இந்தியாவிடமிருந்து உரிமம் பெற்றிருந்ததை நீதிமன்றம் பதிவு செய்துள்ளது.

இதன் மூலம் PPL இந்தியாவின் பதிப்புரிமை உரிமை ஏற்கனவே ஒப்புக்கொள்ள பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட நிகழ்விற்காக உரிமம் பெறத் தவறியது பதிப்புரிமைமீறலாகும்என்றும்நீதிமன்றம்குறிப்பிட்டுள்ளது. இதுகுறித்து PPL இந்தியா பேச்சாளர் ஒருவர் கூறுகையில்,

"1957ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டத்தின் கீழ், ஒலிப்பதிவுகளை பொதுமக்களுக்கு ஒலிபரப்புவதற்கு பிரத்யேக உரிமையை பாதுகாப்பதில் PPL இந்தியா உறுதியாக உள்ளது. உரிமம் இன்றி வணிக ரீதியாக இசை பயன்படுத்தப்படும் எந்தச் சூழலிலும், எங்களின் உறுப்பினர்நிறுவனங்களின்உரிமைகளைப்பாதுகாக்க தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொள்வோம்" என்றார்.



# வத்தலக்குண்டில் சிவ சைவ சித்தாந்தல் பேரவை சார்பாக திருவாசக முற்றோந்தல்!

வத்தலக்குண்டு,ஜன.7

வத்தலக்குண்டுகாந்திநகா',மாா'யம்மாள்காலணி, முதல் தெருவில் சௌந்தா'ய நிவாஸில், சௌந்தராஜன் இல்லத்தில் சிவ சைவ சித்தாந்தல் பேரவை சாா'பாக திருவாசக முற்றோந்தல் நடைபெற்றது.

அம்முற்றோந்தலில் திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டத்திலிருந்து 50க்கும் மேற்பட்ட சிவனடியாா'கள் கலந்து கொண்டனா'. இவ்விழா ஏற்பாடுகளை தலைவா' சௌந்தராஜன், செயலாளா' புங்கொடி முருகன், பொருளாளா' ரத்தின லா அன்பழகன் மற்றும் செயற்குழு உறுப்பினா'கள் செய்திருந்தனா'.

அன்னம் பாலிப்பு ஏற்பாடுகளை சிவனடியாா' கமலாதேவி மனோகரன் அவா'கள் வழங்கினாா'கள்.



# காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி மாவட்ட செயலாளராக அருள்நாதன் நியமனம்!

காஞ்சிபுரம், ஜன.7

காஞ்சிபுரம் சட்டமன்றதொகுதி மாவட்ட செயலாளராக அருள்நாதன் நியமிக்கப்பட்டார் காஞ்சிபுரம் மாவட்ட விடுதலை சிறுத்தை கட்சி நிர்வாகிகளுடன் ரயில்வே சாலையில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் அவருடன் மாவட்ட பொருளாளராக நியமனம் செய்யப்பட்ட திருமா தாசன் செய்தி தொடர்பாளராக நியமிக்கப்பட்ட கனகராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் இந்நிகழ்வில்

இதில் மண்டல செயலாளர் செங்கை ரா தமிழரசன் தலைமையேற்று நடத்தினார், மற்றும் உடன் முன்னாள் மாவட்ட செயலாளர் அண்ணன் பாசறை செல்வராஜ், முன்னாள் மண்டல துணைச்செயலாளர் பருதிக்குளம் சேகர் மற்றும் ஒன்றிய, நகர,முகாம் பொறுப்பாளர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு காஞ்சிபுரம் பழைய ரயில்வே சாலையில் அமைந்துள்ள புரட்சியாளர் அம்பேத்கருக்கு மாலை அணிவித்து புதிய நிர்வாகிகளின் அறிமுக கூட்டம் நடைபெற்றது, இதில் கலந்துகொண்ட அத்தனை தோழர்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளி கிராமம் சின்னாறு நீர்த்தேக்கத்திலிருந்து 2025 2026 ஆம் (பசலி 1435) ஆண்டிற்கு விவசாய நிலம் பாசனத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர்ரெ.சதீஸ், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர்ஆ.மணி முன்னிலையில் தண்ணீர் திறந்து வைத்தார்கள். உடன் பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினர் கே.பி. அன்பழகன், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர்கணேஷ், மாரண்டஅள்ளி பேரூராட்சித் தலைவர்வெங்கடேசன், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாய பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஈரோட்டில் 9-வது சித்த மருத்துவ தின விழா:

## கலெக்டர் கண்காட்சியைத் திறந்து வைத்து மருந்து பெட்டகங்களை வழங்கினார்!

ஈரோடு, ஜன.7

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கின் மூன்றாவது தளத்தில் 9வது சித்த மருத்துவ தின விழா மற்றும் மாவட்ட சித்த மருத்துவ அலுவலகத் திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அலுவலகத்தைத் திறந்து வைத்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்ட சித்த மருத்துவ கண்காட்சியினைப் பார்வையிட்டார்.

இந்த விழாவினை முன்னிட்டு பொது மக்கள் மற்றும் அரசு அலுவலர்களின் பார்வைக்காக மூலிகை கண்காட்சி, மருந்து மூலச்சரக்குகள், சித்த மருத்துவ நூலகம், சிறப்பு மூலிகைகள், பாரம்பரிய அரிசி வகைகள்,பாரம்பரியவிளையாட்டுக்கள், பாரம்பரிய எண்ணெய் மற்றும் சர்க்கரை வகைகள், மருத்துவப் பயன் கொண்ட மண் வகைகள், சிறுதானிய உணவு மற்றும் பால் வகைகள் எனப் பல்வேறு அரங்குகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இவற்றை மாவட்ட முதன்மை நீதிபதி எஸ்.சமீனா மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர். மேலும், தமிழக அரசின் சிறப்புத் திட்டங்களான மகப்பேறு சஞ்சீவி திட்டம், பள்ளி இளந்தளிர் திட்டம் மற்றும் தொற்றா நோய் தடுப்புத் திட்ட கண்காட்சிகளும், மருந்து கண்காணிப்பு மைய கண்காட்சியும் இடம்பெற்றன. தொடர்ந்து நடைபெற்ற சிறப்பு சித்த மருத்துவ முகாமில் பொது மருத்துவம், தொற்றா நோய், வர்மம், தோல் மற்றும் புற சிகிச்சை எனப் பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், மகப்பேறு சஞ்சீவி திட்டத்தின் கீழ் 3 கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சுகப்பிரசவத்திற்கான 11 வகை மருந்துகள் அடங்கிய பெட்டகங்களையும், மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் 4 நபர்களுக்குச் சர்க்கரை நோய் மற்றும் ரத்த அழுத்தத்திற்கான மருந்து பெட்டகங்களையும் ஆட்சித்தலைவர் வழங்கினார். அதேபோல், பள்ளி இளந்தளிர் திட்டத்தின் கீழ் ரத்தசோகை மற்றும் கற்றல்திறன்குறைபாடுகளைநீக்கும்மருந்து பெட்டகங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

முகாமில் பங்கேற்ற 638 பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு நிலவேம்பு குடிநீர், கபசுர குடிநீர், முடவாட்டுக்கால் சூப் உள்ளிட்ட பானங்கள் வழங்கப்பட்டன. வர்ம சிகிச்சை, நசிய சிகிச்சை, ஒற்றடம், தொக்கணம் மற்றும் அகசிவப்பு கதிர் சிகிச்சை போன்ற சிறப்புச் சிகிச்சைகளும் அளிக்கப்பட்டன. இந்த விழாவில் மாவட்ட இணை இயக்குநர் (நலப்பணிகள்) சாந்தகுமாரி, உதவி சித்த மருத்துவ அலுவலர்கள் கண்ணன், லெனின், சுடர்க்கொடி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.




## சர்வதேச அளவிலான கிக் பாக்ஸிங் போட்டிக்கு தேனி மாவட்ட மாணவர்கள் தேர்வு !

ஆண்டிபட்டி. ஜன.7

சர்வதேசஅளவிலானகிக்பாக்ஸிங்போட்டிக்கு தகுதி பெற்ற தேனி மாவட்ட மாணவர்கள் சர்வதேச கிக்பாக்சிங் போட்டிக்கு தகுதி பெற்ற அரசு பள்ளிகளில் படிக்கும் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு தேனி மாவட்ட கிக் பாக்ஸிங் சங்கத்தினர் சார்பாக பாராட்டு விழா நடைபெற்றது.

சர்வதேச கிக்பாக்சிங் போட்டிகள் இந்தியாவின் தலைநகரமான டெல்லியில் உள்ள இந்திராகாந்த உள் விளையாட்டு அரங்கில் பிப்ரவரி மாதம் 4ம்தேதி முதல் 8ம் தேதி வரை நடைபெற உள்ளது.இதற்காக இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் கடந்த மூன்று வருடங்களாக வீரர்களை தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வந்தன.இதில் மாவட்ட மற்றும் மாநில அளவில் வெற்றி பெற்று அதையடுத்து தேசிய அளவில் வெற்றி பெற்ற வீரர்கள் என தனித்தனியாகவெற்றிபெற்றதற்கானமதிப்பெண் புள்ளிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தரவரிசை பட்டியல் தயாரிக்கப் பட்டது.அந்த தரவரிசை பட்டியலில் சர்வதேச கிக் பாக்ஸிங் போட்டியில் பங்கேற்பதற்காக தேனி மாவட்டத்தில் இருந்து ஆண்டிபட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதி கிராமங்களைச் சார்ந்த அரசு பள்ளிகளில் படிக்கும் ஆறு மாணவர்கள் தேர்வு பெற்றுள்ளனர்.குறிப்பாக சீனியர் பிரிவு, ஜூனியர் பிரிவு, சப் ஜூனியர் பிரிவு என மூன்றுபிரிவுகளில்யாழினி, சம்சிதா, கிருபாஸ்ரீ , வசுமதி , ரீகாஸ்ரீ , சபரிஸ் ஆகிய ஆறு மாணவர்கள் தேர்வு பெற்றுள்ளனர்.அவர்களுக்கு ஆண்டிப்பட்டி அருகே உள்ள கன்னியப்பிள்ளைபட்டியில் உள்ள கிக்பாக்ஸிங் உள் அரங்க கூடத்தில் தேனி மாவட்ட கிக் பாக்ஸிங் பயிற்சியாளர் துரைமுருகன் தீவிர பயிற்சி அளித்து வருகிறார்.இந்நிலையில் சர்வதேச போட்டிகளுக்கு தேர்வான கிராமப்புற ஆறு அரசு பள்ளி மாணவர்களுக்கு தேனி மாவட்ட கிக்பாக்சிங் சங்கம் சார்பில் பாராட்டுவிழாநடைபெற்றது.இதில்தேசிய அளவிலான போட்டிகளுக்கு தகுதி பெற்ற மாணவர்களை தேனிமாவட்ட தலைவர் மகாராஜன் உள்ளிட்ட சங்கத்தினர் பாராட்டு தெரிவித்து போட்டிகளில் வெற்றிபெற வாழ்த்து தெரிவித்தனர்.

உதயநிதி பிறந்தநாளையொட்டி

## தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கிரிக்கெட் போட்டி!

அவிநாசி,ஜன.7–

தமிழ்நாடு துணை முதலமைச்சரும் திமுக கழக மாநில இளைஞர்அணி செயலாளரும் ஆன உதயநிதி ஸ்டாலின் பிறந்தநா ளை முன்னிட்டு, திருப்பூர் வடக்கு மாவட்டம் அவிநாசி ஒன்றிய இளைஞர்அணிஅமைப்பாளர் ரமேஷ் அவர்களின் ஏற்பாட்டில் செம்பியநல்லூரில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

நுழைவு கட்டணம் இன்றி நடைபெற்ற இப்போட்டி நேற்று காலை முதல் மாலை வரை நடைபெற்றது. மொத்தம் எட்டு அணிகள் பங்கேற்றன. முதல் பரிசாக ரூ.6000 மற்றும் கோப்பை, இரண்டாம் பரிசாக ரூ.3000 மற்றும் கோப்பை வழங்கப்பட்டது.

சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான தனிப்பட்ட பரிசுகள் மூன்று பேருக்கு வழங்கப்பட்டன. இப்போட்டியை திருப்பூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் திருப்பூர் மாநகர மேயர் தினேஷ்குமார் துவக்கி வைத்தனர். வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை கழக மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் கோகுல், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கராஜ் ஆகியோர் வழங்கினர். நிகழ்வில் சுண்டக்காடு செந்தில், திருமுருகன் பூண்டி ஒன்றிய கழக செயலாளர் பழனிச்சாமி,அவினாசி ஒன்றிய கழக செயலாளர் சிவப்பிரகாஷ், சேவூர் ஒன்றிய கழக செயலாளர் பால்ராஜ்,கோவை வடக்கு மாவட்ட துணை செயலாளர் செந்தில் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் மாவட்ட ஒன்றிய நகர இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## 12 வயது மாணவனுக்கு பாலியல் தொல்லை தந்த ஆசிரியர் கைது!

பாலக்காடு , ஜன.7–

கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் மலம்புழா பகுதியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தவர் அனில். இவர் கடந்த நவம்பர் 29 ம் தேதி, தனது பள்ளியில் பயிலும் 12 வயது மாணவனைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு அந்தச் சிறுவனுக்குக் கட்டாயப்படுத்தி மதுபானம் கொடுத்து, மயக்க நிலையில் இருந்த மாணவனுக்குப் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

உறவினர்கள் பள்ளி நிர்வாகத்தைத் தொடர்பு கொண்டு முறையிட்டுள்ளனர். பள்ளி நிர்வாகம் அளித்த புகாரின் அடிப்படையில் மலம்புழா போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

அப்போது மாணவனுக்கு மது கொடுத்து பாலியல் சீண்டலில் ஈடுபட்டது உறுதியானதையடுத்து, ஆசிரியர் அனிலை போலீசார் கைது செய்தனர். சம்பந்தப்பட்ட ஆசிரியரைத் தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்துள்ளதாகப் பள்ளி நிர்வாகம் அறிவித்துள்ளது.

பெங்களூரில் பயங்கரம்:

## 1 வயது ஆண் குழந்தையை நரபலி கொடுக்க முயன்ற தம்பதி கைது!

### கடைசி நேரத்தில் அதிகாரிகள் தடுத்தனர்!!

பெங்களூர் , ஜன. 7–

கர்நாடக மாநிலம் பெங்களூர் அருகேயுள்ள ஹோஸ்கோட் நகருக்கு உட்பட்ட சுலிபெள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் சையது இம்ரான் (34). அவரது மனைவி (30), இருவருக்கும் திருமணமா கிவிட்டது குழந்தை இல்லாத காரணத்தால் .சில மாதங்களுக்கு முன்பு வெளிமாநில தொழிலாளி ஒருவரிடமிருந்து ஒரு ஆண் குழந்தையைத் தத்தெடுத்தனர். ஆனால், இது சட்டப்பூர்வமாக நடக்கவில்லை.போலிபிறப்புச்சான்றிதழ்தயாரித்து,குழந்தையின் தந்தையிடம் ரகசிய ஒப்பந்தம் போட்டு குழந்தை யைத் தங்களது பாதுகாப்பில் வைத்துள்ளனர். இந்த நிலையில் பவுர்ணமி தினமான 2 நாட்களுக்கு முன் இரவு, அந்தக் குழந்தையை நரபலி கொடுக்கத் தி ட்டமிட்டு ள்ளனர். இதையடுத்து குழந்தைகள் பாதுகாப்பு உதவி எண்ணுக்கு ஒரு மர்ம தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் பேசியவர் , இம்ரான் வீட்டில் ஒரு வயது குழந்தையை நரபலி கொடுக்க ஏற்பாடுகள் நடப்பதாகத் தகவல் தெரிவித்தார். இது குறித்த தகவலறிந்து உடனடியாகச் செய ல்பட்ட அதிகாரிகள், இம்ரானின் வீட்டைத் தேடிச் சென்றனர்.அதிகாரிகள் உள்ளே சென்றபோது, வீட்டின் ஒரு அறையில் ஒரு சிறிய குழி தோண்டப்பட்டிருந்தது. அங்கு பூஜைப் பொருட்கள், ஊதுபத்திகள் மற்றும் மலர்கள் சிதறிக் கிடந்தன. புதையல் கிடைக்கும் என்ற ஆசையில், நள்ளிரவில் குழந்தையை நரபலி கொடுக்க அவர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தது சோதனையில் உறுதியானது. எனவே அதிகாரிகள் குழந்தையை உடனடியாக மீட்டு பாதுகாப்பான இடத்திற்கு மாற்றினர். சட்டவிரோதமாகக் குழந்தையைத் தத்தெடுத்தது மற்றும் நரபலி கொடுக்க முயன்றது தொடர்பாக சையது இம்ரான் மற்றும் அவரது மனைவியை கைது செய்து குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நலக் குழுவினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மார்ச் 3-ல் சந்திர கிரகணம்:

## திருப்பதி கோயில் 10.30 மணி நேரம் மூடப்படும்!

### தேவஸ்தானம் அறிவிப்பு!!

திருமலை, ஜன.7–

மார்ச் 3–ஆம் தேதி சந்திர கிரகணம் ஏற்படுவதால் திருமலை ஏழுமலையான் கோயில் 10.30 மணி நேரம் மூடப்படும் என தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

மார்ச் 3ஆம் தேதி பிற்பகல் 3.20 மணிக்கு சந்திர கிரகணம் தொடங்கி, மாலை 6.47 மணிக்கு முடிவடைகிறது.

இதையொட்டி அன்று காலை 9 மணி முதல் இரவு 7.30 மணி வரை கோயில் கதவுகள் அடைக்கப்படும். வைகானச ஆகம விதிப்படி, கிரகணத்துக்கு 6 மணி நேரம் முன்பே கோயில் மூடப்படுவது வழக்கம்.கிரகணம் முடிந்ததும் இரவு 7.30 மணிக்கு கோயில் திறக்கப்படும்.

அதன்பின் சுத்தி, புண்யாஹவசனங்கள் நடைபெறும். இரவு 8.30 மணி முதல் பக்தர்களுக்கு தரிசனம் மீண்டும் வழங்கப்படும். சந்திர கிரகணத்தையொட்டி அஷ்டதள பாத பத்மராதன சேவை, கல்யாணோற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம் மற்றும் சஹஸ்ரதீபாலங்கார சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. பக்தர்கள் இதனை கருத்தில் கொண்டு பயணத்தை திட்டமிட வேண்டும் என தேவஸ்தானம் கேட்டுக் கொண்டுள்ளது.



## பரமக்குடியில் அசுகரன் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் சமத்துவ பொங்கல் விழா!

பரமக்குடி, ஜன.7

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் அசுகரன் விளையாட்டு கழகத்தின் சார்பில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது .

பரமக்குடியில் செயல்பட்டு வரும் அசுகரன் விளையாட்டு கழகத்தில் சர்வதேச,தேசிய, மாநில ,மாவட்ட அளவிலான விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இங்கு ஒவ்வொரு ஆண்டும் தமிழர் திருநாளாம் தை பொங்கல் விழா கொண்டாடப்படுவது வழக்கம்.

இன்று சமத்துவ பொங்கல் விழா வெகு விமர்சியாக கொண்டாடப்பட்டது. புது பானையில் பொங்கலிட்டு சூரியபகவானுக்கு படையலிட்டு விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் பெற்றோர்கள் புத்தாடை அணிந்து விழாவை சிறப்பித்து கொண்டாடி மகிழ்ந்தனர் .

பின்னர் சர்வதேச , தேசிய, மற்றும் மாநில அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து விளையாட்டு வீரர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. சிலம்பாட்டம் அடியும், பெண்கள் கும்மியாட்டம் ஆடி அசத்தினர். கயிறு இழுத்தல் ,பானை உடைத்தல் (உரி அடித்தல்)உள்ளிட்ட தமிழர்களின் விளையாட்டுகள் நடைபெற்றது .

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டன.

இந்த சமத்துவ பொங்கல் விழாவில் 100க்கும்மேற்பட்டோர்கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.



## சோழவந்தான் தொகுதி வி.சி.க.மாவட்ட செயலாளர் ஆ.தமிழளாளன்அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

அலங்காநல்லூர், ஜன.7

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளராக செல்லகவுண்டம்பட்டியை சேர்ந்த தமிழாளன் என்பவரை அக்கட்சி நியமனம் செய்துள்ளது.

அதைத் தொடர்ந்து, அலங்காநல்லூர் அருகே பெரிய ஊர் சேரிகிராமத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு மாவட்ட செயலாளர் ஆ. தமிழாளன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில், முன்னாள் மண்டல செயலாளர் கலைவாணன், மாவட்ட அமைப்பாளர் அதிவீர பாண்டியன், ஒன்றிய செயலாளர் தமிழ் நிலவன், அன்பழகன், வடகல்பூமி, அருள் மொழியன், மற்றும் வக்கீல் கடல் கேசன். சின்ன இலந்தைகுளம் ராஜாராம், எரம்பட்டி பதினெட்டாம் படி, தமிழ்குமரன்,

வாசு. பரமசிவம், சரவணன், முத்துகிருஷ்ணன், அரசு/வாடிப்பட்டி வளவன், சத்திவேல்பாண்டியன், தமிழ்செல்வன், மகளிர் அணி காமாயி, தமிழ்செல்வி , மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் தன்மான செல்வி, தேன்மொழி, மகராசி உள்பட கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




## திருப்பத்தூர் புதிய பேருந்து நிலையத்தில் ஆக்ரமிப்புகளை அகற்ற கோரி கலெக்டரிடம் நகராட்சி கடை வியாபாரிகள் மனு!

திருப்பத்தூர் ஜன.7

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் சிவசௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது. இதில்

திருப்பத்தூர் நகராட்சி சார்பில் திருப்பத்தூர் புதிய பேருந்து நிலையத்தில் வணிக வளாகங்கள் கட்டப்பட்டு நகராட்சி மூலம் கடைகள் ஏலம் விடப்பட்டு அதனை வியாபாரிகள் மாத வாடகைக்கு எடுத்து டீ கடை , ஜூஸ் கடை, ஸ்வீட் கடை, பேன்சி ஸ்டோர் உள்ளிட்ட கடைகள் வைத்து வியாபாரம் செய்து வரும் நிலையில் தங்களது கடைகளுக்கு முன்பு தள்ளுவண்டி வியாபாரிகள் ஆக்ரமிப்பு செய்துக் கொண்டு பேருந்து நிலையம் வரும் பயணிகள், பொதுமக்களுக்கு தினமும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருவதாகவும், மேலும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகையை தள்ளுவண்டி வியாபாரிகளின் ஆக்ரமிப்பின் காரணமாக போதிய வருவாய் இல்லாமல் வாடகை செலுத்த முடிவதில்லை எனவே புதிய பேருந்து நிலையத்தில் உள்ள ஆக்ரமிப்பை அகற்றி தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என நகராட்சி கடை வியாபாரிகள் மாவட்ட கலெக்டர் சிவசௌந்தரவல்லி இடம் கோரிக்கை மனு அளித்தனர். மனுவை பெற்றுக் கொண்ட கலெக்டர் உங்கள் கோரிக்கை மனு மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். இந்த கூட்டத்தில் அனைத்து துறை அலுவலர்கள் பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஒகேனக்கல் காவிரி ஆற்றில்

# துணிக்கழிவுகள் அகற்றும் பணியில் பஞ்சாயத்து ஊழியர்கள்!



பென்னாகரம், ஜன.7

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அடுத்த ஒகேனக்கல் சுற்றுலா தளத்திற்கு சுற்றுலா பயணிகள் ஏராளமானோர் தினம் தோறும் வந்து செல்கின்றனர். அதேபோல் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் ஈமச்சடங்குகள் செய்வதற்காக தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருந்து ஏராளமான பொதுமக்கள் தங்கள் முன்னோர்களுக்கும் இறந்தவர்களுக்கும் ஈமகாரியங்கள் திதி கொடுக்கும் சடங்குகள் செய்வதற்காக முதலைப்பண்ணை எதிரே உள்ள காவிரி ஆற்றிற்கு வருகை தந்து தங்கள் முன்னோர்களுக்கும் இறந்தவர்களுக்கும் தர்ப்பணம் கொடுப்பது ஈமச்சடங்குகள் செய்து வருகின்றனர்.

தர்ப்பணங்கள் கொடுக்கச் செல்லும் பொழுது காவிரி ஆற்றில்மூழ்கி அவர்களின் ஆடைகளை ஆற்றில் விட்டு செல்கின்றனர். இதனால் முதலைப் பண்ணை எதிரே உள்ள காவிரி ஆறு பகுதியில் அதிக அளவில் துணி கழிவுகளால் நிரம்பி காணப்படுகிறது. இந்த நிலையில் அப்பகுதிக்கு வரும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் காவிரி ஆறு பகுதிகளில் துணிக்கழிவுகள் அதிகமாக இருப்பதாக மாவட்ட நிர்வா கத்திற்கு கோரிக்கை வைத்ததை அடுத்து மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சக்திவேல், லோகநாதன் ஆகியோரின் அறிவுறுத்தியலின்படியும்கூத்தப்பாடி ஊராட்சி செயலாளர் குமரன் மேற்பார்வையில் ஒகேனக்கல் சுற்றுலா தளத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் கூத்த ப்பாடி ஊராட்சி பணியாளர்கள் ஒன்றிணைந்து முதலைப் பண்ணை எதிரே உள்ள காவிரி ஆற்றில் உள்ள துணிக்கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.



சேலம் மாவட்டம் மேட்டூர் காவிரி ஆற்றின் குறுக்கே பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட காவிரி பாலம், கடந்த 10 ஆண்டுகளாக எவ்வித முறையான பராமரிப்பு இன்றி காணப்பட்டதால், மேட்டூர் எம்எல்ஏ சதாசிவம், மாநில அரசிடம் கோரிக்கை வைத்ததன் பெயரில், 39 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, பின்னர் மத்திய அரசின் நீர்வளத்துறை அதிகாரிகள் பாலத்தை ஆய்வு செய்தபோது, புதிய பாலம் கட்டுவதற்கு தற்போது சாத்தியக்கூறுகள் இல்லாத நிலையில், பராமரிப்பு பணிகள் செய்து கொள்ளலாம் என கூறியதன் அடிப்படையில், மாநில அரசு 25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, காவேரி பாலம் கடந்த மாதம் பழுதுபார்க்கப்பட்டது. பணிகள் அணைத்தும் முடிந்த நிலையில், இன்று காலை மேட்டூர் எம்எல்ஏ சதாசிவம் ரிப்பன் வெட்டி பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். தங்களது கோரிக்கையை நிறைவேற்றியதற்காக அப்பகுதி மக்கள் எம்எல்ஏ சதாசிவத்திற்கு தங்களது பாராட்டுகளை தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்கள் மற்றும் பாமகவினர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் சங்கத்தின் திருப்பூர் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட தலைவர் பி என் பாலு மாவட்ட செயலாளர் கே துரைசாமி மாவட்டத் துணைத் தலைவர் எஸ் வெங்கடேஷ் உள்பட பலர் சிறப்புரையாற்றினர் இந்தக் கூட்டத்தின் போது இச்சங்கத்தின் இணைப்பு சங்கமான தமிழ்நாடு கொசு ஒழிப்பு பணியாளர்கள் சங்கத்தின் தலைவராக மாவட்ட தலைவர் நல்ல நல்லான் மாவட்டச் செயலாளராக முருகேசன். பொருளாளராக செல்வராஜ். மாவட்ட மாவட்ட மகளிர் அணி தலைவியாக முத்துலட்சுமி. சுமதி உள்பட நிர்வாகிகள் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டது.

# ஜேசிஐ தருமபுரி சமூக சேவைத் திட்டங்கள் குறித்து மாவட்ட ஆட்சியருடன் நிரோஷா ஆலோசனை!



தருமபுரி, ஜன.7

சமூக நலன் மற்றும் அரசின் வளர்ச்சி இலக்குகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட உள்ள சமூக சேவைத் திட்டங்கள் தொடர்பாக தலைவர் நிரோஷா அன்பு மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த சந்திப்பின்போது, ஜேசிஐ தருமபுரி சார்பில் செயல்படுத்தப்பட உள்ள "தீப்பொறி திட்டம்" குறித்து மாவட்ட ஆட்சியரிடம்விரிவாகவிளக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற நூலகங்கள் மற்றும் அரசு பள்ளிகளுக்கு புத்தகங்கள் வழங்கி, மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை வளர்த்தெடுத்து கல்வி மேம்பாட்டிற்கு பங்களிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டது.

ஜேசிஐ தருமபுரி மேற்கொள்ளும் சமூக சேவை முயற்சிகளை மாவட்ட ஆட்சியர் ரெ. சதீஸ் கவனமாகக் கேட்டறிந்ததுடன், அரசின் வளர்ச்சி நோக்கங்களுக்கு இணங்க செயல்படும் இத்தகைய திட்டங்களுக்கு தேவையான ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தார்.

இந்த ஆலோசனை சந்திப்பு, ஜேசிஐ தருமபுரியின் எதிர்கால சமூக நல மற்றும் கல்வி சார்ந்த முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் முக்கியமான நடவடிக்கையாக அமைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

## ஏரியூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பெரும்பாலையில்

# என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

பென்னாகரம்.ஜன.7

தர்மபுரி மாவட்டம் ஏரியூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பெரும்பாலையில் எங்கள் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் நடைபெற்றது இதில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் எப்படி பணியாற்ற வேண்டும் திமுக மக்களுக்கு அளித்த சாதனைகளை பொதுமக்களுக்கு எடுத்துரைத்தனர் 2026 யில் திமுக ஆட்சி அமைக்க வேண்டும் அதற்கு கட்சி தொண்டர்கள் உழைக்க வேண்டும் என திமுக தொகுதி பார்வையாளர். பாரி

பேசினார். மாநில பொதுக்குழு உறுப்பினர் சோலைமணி ஏரியூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துசாமி துணை ஒன்றிய செயலாளர் சின்னு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் துரைசாமி மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சாந்தரூபன்

மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர்.

தனபாலன் ஒன்றிய கழக கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் முருகேசன் மாணவரணி அமைப்பாளர் நஞ்சப்பன் கிளைச் செயலாளர் சிவக்குமார் சுப்பிரமணி நாராயணன் நாகப்பன் உள்ளிட்ட நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.( படம் விளக்கம்) பெரும்பாலையில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் நடைபெற்றது.

# தாராபுரத்தில் கனிமொழி பிறந்தநாள் விழா!



திருப்பூர்,.ஜன.7

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் கனிமொழி எம்.பி பிறந்தநாள் விழா தாராபுரம் அண்ணா சிலை அருகில் கேக் வெட்டியும் இனிப்புகள் வழங்கியும் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட மகளிரணி தலைவர் சரஸ்வதி ராஜேந்திரன் மாவட்ட மகளிரணி துணைத் தலைவர் அருக்காணி ராமசாமி மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சசிகலா நகர மகளிரணி அமைப்பாளர் புனிதா சக்திவேல் நகர மகளிர் தொண்டரணி அமைப்பாளர் முத்துலட்சுமி பழனிச்சாமி மற்றும் நகர அவை தலைவர் கதிரவன் நகர துணை செயலாளர் தவச்செல்வன் ஜெயக்குமார் அண்ணன் பெரியசாமி நகர துணை அமைப்பாளர்கள் ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிவசங்கர் தொண்டன் துணை அமைப்பாளர் சண்முகம் முத்தலிப்பு மற்றும் பலர் கலந்து கொண்டு மிக சிறப்பாக நிகழ்ச்சி கொண்டாடப்பட்டது.



## பொங்கல் தொகுப்பிற்கான டோக்கன்

# ஒகேனக்கல் ஊட்ட மலை கிராமங்களில் வழங்கல்!

பென்னாகரம், ஜன.7

தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின் நேற்று முன்தினம் பொங்கல் திருநாளை முன்னிட்டு ரேஷன் அட்டைதாரர்களுக்கு தலா மூன்றாயிரம் ரூபாய் மற்றும் பொங்கல் தொகுப்பு வழங்கப்படும் என அறிவித்திருந்தார்.

இதனை தொடர்ந்து தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் பொங்கல் பரிசு தொகுப்பான 3 ஆயிரம் ரூபாய்க்கு டோக்கன் வழங்கப்பட்டு வருகிறது .

இந்த நிலையில் தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அடுத்த ஒகேனக்கல் ஊட்டமலை ஆகிய கிராமப் பகுதிகளில் உள்ள நியாய விலை கடைகளில் 1,235 குடும்ப அட்டைதாரர்கள் மாதம் தோறும் நியாய விலை கடைகளில் பொருட்கள் பெற்று பயனடைந்து வருகின்றனர். இதனை தொடர்ந்து தமிழகம் முதலமைச்சர் பொங்கல் தொகுப்புடன் ரேஷன் அட்டைதாரர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என அறிவித்ததை தொடர்ந்து நேற்று ஒகேனக்கல் சத்திரம், இந்திரா நகர், ராணிப்பேட்டை, ஏரிக்காடு, ஊட்டமலை, நாடார் கொட்டாய், தலவக்காடு உள்ளிட்ட பகுதிகளுக்கு ஒகேனக்கல் ஊட்டமலை கிராமங்களில் செயல்பட்டு வரும் ரேஷன் கடை பணியாளர் பட்டியல் எழுத்தாளர் தொல்காப்பியம் எடையாளர் மதியழகன் உதவியாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் இப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு வீடு வீடாக சென்று பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் 3000 ரூபாய் வழங்குவதற்கான டோக்கன் வழங்கும் பணியில் ஈடுபட்டனர்.



தர்மபுரி அடுத்த பைசுஹள்ளியில் செயல்பட்டு வரும் பெரியார் பல்கலைக்கழக பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பெரியாரின் 52 ஆவது நினைவு நாளையொட்டி அவரது படத்துக்கு மாலை அணிவித்து இயக்குனர் பொறுப்பு முனைவர் செல்வ பாண்டியன் தலைமையில் மரியாதை செலுத்தப்பட்டது . உடன் துறைத்தலைவர்கள், அனைத்து துறை பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், முதுநிலைப் மாணவர்கள் கலந்து கொண்டனர் நிகழ்வை முனைவர் நந்தகுமார் அருண் பாரதி ஏற்பாடு செய்திருந்தனர்



# தர்மபுரியில் பட்ட ஆராய்ச்சியாளருக்கான இரண்டு நாள் பயிற்சி பட்டறை!

தர்மபுரி,ஜன.7

தர்மபுரி அடுத்த பரிசு பள்ளியில் செயல்பட்டு வரும் பெரியார் பல்கலைக்கழக பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மைய உள்தர உத்தரவாத மையத்தின் சார்பாக முனைவர் பட்ட ஆராய்ச்சியாளருக்கான இரண்டு நாள் பயிற்சி பட்டறை 'தரமான ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிடும் முறை மற்றும் காப்புரிமை, பேட்டண்ட் பதிவு செய்தல்' என்றதலைப்பில் நடத்தப்பட்டது.

இதன் முதல் நாள் நிகழ்வில் ஆராய்ச்சி மைய இயக்குனர் (பொ) பேரா. முனைவர் செல்வபாண்டியன் தலைமை உரையாற்றினார். முன்னதாக உள்தர உத்திரவாதம் மைய ஒருங்கிணைப்பாளரும் இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளருமான பேரா. முனைவர் கோவிந்தராஜ் வரவேற்புரை ஆற்றி இப்பயிற்சி பட்டறைக்கான நோக்கம் பற்றி எடுத்துரைத்தார். தொடர்ந்து தொடர்ந்து மும்பை, எல்டியான் நிறுவன கல்விசார் துறையின் முதன்மையர் முனைவர் ஜனனி அவர்கள் பேட்டன் பதிவு செய்தல் முறையைப் பற்றி உரையாற்றினார். இரண்டாம் நாள் நிகழ்வில் டெல்லி, உயர் நீதிமன்ற வழக்குரைஞர் முனைவர் வெங்கடேசன் அவர்கள் காப்புரிமை பதிவு செய்தல் பற்றி விரிவான ஒரு உரையை நிகழ்த்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற பயிற்சி இப்பயிற்சி பட்டறைக்கான நிறைவு விழாவில் ஊத்தங்கரை, யூனிக் கல்வி குழுமத்தின்தலைவர்பேராசிரியர்அருள்அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். மேலும் பெரியார் பல்கலைக்கழக புல முதன்மையர் பேராசிரியர் ஜெயராமன் அவர்கள் நிறைவு விழா உரையாற்றினார். முன்னதாக நிறைவு விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் முனைவர் கிருத்திகா வரவேற்று பேசினார். இறுதியாக முனைவர் சஞ்சய் காந்தி நன்றி உரையாற்றினார்.

இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை உள்தர உத்தரவாதம் அமைய உறுப்பினர்களான முனைவர் காமராஜ் முனைவர் முகுந்தன் முனைவர் அனிதா முனைவர் பிரபா மற்றும் முனைவர் சுரேஷ் ஆகியோர் செய்து இருந்தனர்.

இந்நிகழ்வை ஆங்கிலத்துறை இரண்டாம் ஆண்டு மாணவி ஜெய் ஸ்ரீ மற்றும் முதலாம் ஆண்டு மாணவி கிருத்திகா ஆகியோர் தொகுத்து வழங்கினர்.


# பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரராகிய திருநெல்வேலி மாவட்டம் கதவு எண் 9/231 வடக்குத்தெரு, சொக்கலிங்கபுரம், முதுமொத்தான்மொழி, திசையன் விளை 627654 என்ற முகவரியில் வசிக்கும் சுபாஷ் என்பவரின் முறையான தகவலின் பேரில் தெரிவிப்பது யாதெனில்.

எனது கட்சிக்காரர் திசையன்விளை சார்பதிவகத்தில் 3853/2025 பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் சர்வே எண் 132/36க்கான சுமார் 7 செண்ட் சொத்தையும்,3335/2015 , கிரையபத்திரம் சர்வே எண்:132/32 (3செண்ட்)அனுபவித்து வருகின்றார். மேற்படி சொத்தை ஈடு கெட்டி எனது கட்சிக்காரர் Veritas Finance Ltd ல் கடன் கோரும்போது சொத்து சம்மந்தமான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது. அப்போது தன் சொத்திற்கு சம்மந்தமான மூல ஆவணம் 1271/2015 கிரய பத்திரம்,1223/2001, செட்டில்மெண்ட் பத்திரம் ஆகியவற்றை எனது கட்சிக்காரர் ஜெராக்ஸ் எடுப்பதற்காக கடந்த 15/12/2025 அன்று பேருந்தில் சென்ற போது அவரிடமிருந்து சொத்திற்கு சம்மந்தமான மேற்படி மூலஆவணங்கள் தொலைந்தது தெரியவந்தது. ஆகவே மேற்படி காணாமல்போனஅசல்மூலஆவணங்களைஎடுத்துதன்வசம்வைத்திருப்பவரோ அல்லது சொத்தின் பெயரில் யானுமே உரிமையோ, ஆட்சேபனையோ பின்தொடர்ச்சியோ இருந்தாலோ நாளை முதல் 15 நாட்களுக்குள் எழுத்து மூலமாக தக்க ஆதாரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். அதன்பின் வரும் எந்தவிதமான ஆட்சியேபனையும் எனது கட்சிக்காரரை எந்த வில்லங்கத்திற்கும் கட்டுபடுத்தாது என்பதனை இந்த பொது அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**M. MARIA SINGAM .**

M. A. LLB , ADVOCATE/NOTARY PUBLIC
GO. Ms. No. 202/17, 2.No. 328/84
24,LAW CHAMBER, NAGERCOIL1


## புதுக்கோட்டை அருகே

# தமிழ்நாடு அறிவியல் இயக்கம் கறம்பக்குடி ஒன்றியம் சார்பில் புதிய நிர்வாகிகள் தேர்வு!



புதுக்கோட்டை ஜன.7

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க ஒன்றிய மாநாடு வட்டாரத் தலைவர் சர்பிரசாதம் தலை மையில் நடைபெற்றது.இதில் கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னதுரை வட்டார மாநாட்டை தொடங்கி வைத்தார்.

அறிவியலும் இன்றைய இந்திய அரசியலும் தலைப்பில் மக்கள் சந்திதிக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வுகாண வேண்டிய அறிவியல் பூர்வ தீர்வுகளை. பற்றியும் பேசினார்.

மாநாட்டில் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில பொதுக்குழு உறுப்பினர் மணவாளன் , மாவட்டத் தலைவர் முத்துக்குமார், மாவட்டத் துணைத் தலைவர் பிச்சைமுத்து இணைச் செயலாளர் கவிஞர் சாமியப்பன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், கிளை செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதில் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்சின்னதுரை, கறம்பக்குடி வட்டாட்சியர் ஜமுனா தீத்தானிப்பட்டி நடுநிலைப்பள்ளி மாணவி அட்சயா, குழந்திரான்பட்டு அரசு உயர் நிலைப் பள்ளி மாணவன் பிரனிஷ், செ வ்யாய்ப்பட்டி நடுநிலைப்பள்ளி மாணவர்கள் மஹாஸ்ரீ திருப்பதி, ஹரிணி, பிரகதீஸ்வரி ஆகியோருக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

புதிய நிர்வாகிகள் வட்டார தலைவராக சர்பிரசாதம், செயலாளராக வீரபாலன், பொருளாளராக முத்து துணைத் தலைவர்களாக பிச் சைமுத்து, சாமியப்பன், சிற்றரசன், ரோஷ்னிஅப்துல்லா, நித்யா, ஸ்டெல்லா, அமுல்துரை இணைச் செயலாளர்களாக எவரெஸ்ட் சுரேஷ், சிவானந்தம், திவ்யா, இளவரசி, அனாமிகா, தமிழரசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.